செ.வெ.எண்: 232 நாள்: 20.03.2020

**பொது மக்கள் மின்சாரக் கட்டணம், தொலைபேசி கட்டணங்களை ஆன்லைனில் செலுத்தலாம்.**

**ஆவின் பாலுக்குரிய கட்டணத்தை முகவர்கள் வங்கி கணக்கில் இணையம் மூலமாக செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொது மக்கள் மின்சாரக் கட்டணம், தொலைபேசி கட்டணம், பால் கட்டணத்தை ஆன்லைனில் செலுத்த வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் போர்கால அடிப்படையில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக கொரோனா வைரஸ் காய்ச்சல் பரவுவதை கட்டுபடுத்த தமிழக அரசு ஏற்கனவே பொது இடங்களில் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தியுள்ளது. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களை தவிர்த்திடும் வகையில் மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் ஆவின் பாலுக்குரிய கட்டணம் போன்றவற்றை செலுத்த அலுவலகங்களுக்கு வருவதை முற்றிலுமாக தவிர்த்து ஆன்லைன் மூலமாகவே கட்டணங்களை செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சார வாரியத்தில் கட்டணத்தை செலுத்துவதற்கு www.tangedco.gov.in என்ற இணையத்தளம் மூலமாகவும், தொலைபேசிக் கட்டணத்தை செலுத்துவதற்கு www.portal.bsnl.in என்ற இணையத்தளம் மூலமாகவும், ஆவின் பாலுக்குரிய கட்டணத்தை முகவர்கள் வங்கி கணக்கில் இணையம் மூலமாக செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டு முகவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் அனைவரும் ஆன்லைன் மூலம் மேற்கண்ட கட்டணங்களை செலுத்தி பொது இடங்களுக்கு வருவதை தவிர்த்து கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**